1972 டிசம்பர் 15]

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்: மன்றத்தின் முன் உள்ள கேள்வி :

" பாராளுமன்ற அவைகள் இரண்டிலும் நிறைவேற்றப்பட்டு, 1972 ஆம் ஆண்டு அரசியல் அமைப்பு (30-வது திருத்த) சட்ட முன் வடிவினால் செய்யக் கருதப்பட்டுள்ளவையும், இந்திய அரசியல் அமைப்பின் 368-வது பிரிவின் (2) பகுதியின் வரம்பு நிபந்தனையின் நோக்கத்தின் கீழ் வருப வையுமான திருத்தங்களை இம்மன்றம் இசைவுடன் உறுதிப்படுத்துகிறது."

தனித்தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

5. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(3) தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 47/42.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே,

"சட்டப்பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு @ (தமிழ்நாடு சட்ட முன்வடிவு எண் 47/72) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்"

என்று நான் முன் மொழிகிறேன்.

நகராட்சிப் பணியாளர்களின் வகைப்பாடு, பணிக்குச் சேர்த்துக் கொள்ளும் முறைகள், பணி நிபந்தனைகள், சம்பளம், படிகள், பணியாளர் களின் ஒழுக்கம், நடத்தை ஆகியவற்றை முறைப்படுத்துவது குறித்து தமிழ்நாடு 1920-ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 77-எ பிரிவின்கீழ் பிறப்பிக்கப்படவிருக்கும் வரைவு விதிகள் மேற்படிச் சட்டத்தின் 305-எ பிரிவின்கீழ் மாற்றத்துடனோ மாற்றமின்றியோ சட்ட மன்றம் ஒப்புதல் வழங்குவதற்காக இரு அவை களின் முன்பும் இன்றைய நிலையில் வைக்கப்படவேண்டும். இதற்கு ஒப்பு தல் அளிக்கப்பட்ட பின்னரே இந்த விதிகள் பிறப்பிக்கப்படலாம். இச் சட்டத்தின்கீழ் வகுக்கப்படும் ஏனைய விதிகளுக்கு இச் சட்டத்தின் 304-ஆவது பிரிவின்கீழ் சட்ட மன்றத்தின் இரு அவைகளின் பின் ஒப்புதல் வேண்டப்படுகிறது. அரசுப் பணியாளர் தொடர்பாக விதிகள் திருத்தப் படும்போதெல்லாம் நகராட்சிப் பணியாளர் தொடர்பான விதிகளும் திருத்தப்படவேண்டியது அவசியமாகும். எனவே, நகராட்சிப் பணியாளர் தொடர்பான விதிகள் அடிக்கடி திருத்தப்படவேண்டியது அவசியமாகிறது. இத்திருத்தம் வாலாயமான திருத்தமாயிருப்பினும், அதற்கு 305-எ பிரிவில் கொடுத்துள்ள விரிவான நடைமுறையைப் பின்பற்ற வேண்டி

240–241-ஆம் பக்கங்களில் இணைப்பு VI ஆக அச்சடிக்கப்பட்டுள்ளது.

யுள்ளது. நகராட்சிப் பணியாளர்களின் நலனைக் கருதி இத்திருத்தம் கூடிய விரைவில் செய்யப்படவேண்டியது அவசியம் எனக் கருதப்பட்டுள்ளதால் சட்டத்தின் 305-எ பிரிவில் கொடுத்துள்ள விரிவான நடைமுறையைக் கைவிட்டுவிட்டு 304-வது பிரிவில் கொடுத்துள்ள நடைமுறையைப் பின்பற்ற அரசு முடிவு செய்துள்ளது. மேற்கண்ட நோக்கத்திற்குச் செயல் வடிவம் கொடுக்க இச்சட்ட வரைவு விழைகிறது.

இச்சட்ட வரைவு மேற்சொன்ன நோக்கங்களை எய்த விழைகிறது என்று கூறிக்கொண்டு இவ்வரைவினை இவ்வவையின் ஆய்விற்கு வைக்கிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : மன்றத்தின் முன் உள்ள கேள்வி :

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன் வடிவு (தமிழ்நாடு சட்ட முன்வடிவு எண் 47/1972) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது. சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை, மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை, மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 47/1972) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று நான் முன்மொழிகிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : சட்ட மன்றத்தின் முன் உள்ள கேள்வி :

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1972ஆம்ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 47/1972) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.